# கல்கமுவ பிரதேச சபை
# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 12 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கல்கமுவ பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கல்கமுவ பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டில் பிழையினை சரி செய்வதின் கீழ் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 27,134,156 தொகை மூலதனச் செலவினக்

கணக்கில் செலவு வைக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டில் மூலதனச் செலவினம் அதே பெறுமானத்தினால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் ஓய்வூதியப் பங்களிப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,034,678 தொகை கடன் கொடுத்தோரின் கீழும் மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 91,888 தொகை வருமானச் செலவினக் கணக்கின் கீழும் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மோட்டார் கிரேடர் வருமான செலவினக் கணக்கில் மீளாய்வாண்டில் கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 2,558,791 தொகையாகவும் இருந்த போதிலும் அது ரூபா 3,172,694 தொகையாக கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் மோட்டார் கிரேடர் கணக்கில் இலாபம் ரூபா 613,903 தொகையினால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 3,123,896 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 31,503,440 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,215,518 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,138 | 912 | 514 |
| (ii) | வாடகை | 6,013 | 6,994 | 1,278 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,521 | 1,382 | 139 |
| (iv) | ஏனைய வருமானம் | 12,830 | 72,557 | 5,575 |

### 2.2.2 ஆதன வரி

வருடாந்த பட்டியலிடல்கள் ரூபா 1,145,052 தொகையில் ரூபா 514,153 தொகையான நிலுவை வரி தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவு மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி நிருவாகம்) விதிக் கோவையின் விதி 33 தொடக்கம் 42 வரையிலான ஏற்பாடுகளின் பிரகாரம் கொடுப்பனவுகளைச் செலுத்தாத நபர்கள் தொடர்பாக நிலுவைப் பட்டியல் மற்றும் இறுதி அறிவித்தல் தயாரிக்கப்பட்டு சொத்துக்களை தடைசெய்யும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 வாடகை**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரிய மோட்டார் கிரேடரை வாடகைக்கு வழங்கியதற்காக 2009 - 2012 காலத்திற்குரிய ரூபா 3,172,694 தொகையும், பேகோ இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியதால் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 2,696,351 தொகையும், செப்பனிடும் ரோலரை வாடகைக்கு வழங்கியமையால் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 1,295,731 தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டது. உரிய தரப்பினருடன் முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாமையின் காரணமாக இப்பணத்தினை அறவீடு செய்தல் பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான 13 சொத்துக்களில் ஆகக் குறைந்த கேள்வியான ரூபா 254,472 தொகையான 3 சொத்துக்களை மீளாய்வாண்டில் வாடகைக்கு விடமுடியாதிருந்தது. 1988 இன் பிரதேச சபைகள் (நிதி நிருவாகம்) விதிக் கோவையின் விதி இலக்கம் 76 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் வாடகைப் பதிவேடு ஒழுங்குமுறையாக பராமரிக்கப்பட்டிராததுடன் உரிய தகவல்கள் முறையான பிரகாரம் பூரணப்படுத்தப்பட்டு சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வருடாந்தம் சொத்துக்களை வாடகைக்கு விடுவதின் கீழ் 1994 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 48,715 தொகையும் 2009 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 16,755 தொகையும் 2011 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 449,866 தொகையும் 2012 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 306,490 தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவீடு செய்ய வேண்டி இருந்தது.

(ஈ) கல்கமுவ பொதுச் சந்தைக் கடைகளை வாடகைக்கு விடுவதின் கீழ் ஒரே தடவையில் செலுத்தப்படுகின்ற பணம் தவணை கொடுப்பனவில் நலிவான தன்மை காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் 29 கடைகளில் இருந்து ரூபா 2,035,579 தொகை அறவிடவேண்டி இருந்தது.

(உ) ஆகக் குறைந்த கேள்வி ரூபா 9,193,154 தொகையானது 12 கடைகளின் ஒரே தடவையில் செலுத்தும் முறையில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரப்பட்டிருந்தது. 2012 மே இறுதி வரையிலும் 3 கடைகளுக்குரிய ரூபா 1,896,118 கூட்டுத்தொகையான ஆகக் குறைந்த கேள்வியே

கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஆகக் குறைந்த ரூபா 5,810,630 கூட்டுத்தொகையான 7 கடைகள் தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர பட்டியலிடல்களில் 1988 இன் பிரதேச சபையின் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் விதிக் கோவையின் விதி இல. 59 மற்றும் 67 வரையுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 தொலைபேசிப் பரிவர்த்தனை கோபுரங்களுக்கான செயன்முறைக் கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதியில் சபை அதிகாரப் பிரதேசத்தில அமைக்கப்பட்டுள்ள தொலைபேசி பரிவர்த்தனை கோபுரங்களின் எண்ணிக்கை 05 ஆக இருந்ததுடன் செயன்முறைக் கட்டணங்களுக்கு மேலதிகமாக இந்த கோபுரங்களுக்காக முன்னைய ஆண்டின் புரள்வின் அடிப்படையில் 1 சதவீதத்திற்கு விஞ்சாத தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 3,000 படி அனுமதிப்பத்திரக் கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டிற்குரிய கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 பஸ்நிலைய வாகனத் தரிப்பிடக் கட்டண அறவிடல்

கல்கமுவ பஸ்நிலைய வாகனத் தரிப்பிடக் கட்டண அறவிடல்கள் 2012 ஆம் ஆண்டு வரை முறையாகக் காணப்படாதிருந்ததுடன் 2012 செப்தெம்பர் தொடக்கம் வருமானத்தின் அடிப்படையில் 40 சதவீத தரகைச் செலுத்தும் அடிப்படையில் நபர் ஒருவர் சேர்க்கப்பட்டு மாதாந்தம் ரூபா 43,960 இற்கும் ரூபா 217,000 இற்கும் இடையிலான வீச்சில் தரகு செலுத்தப்பட்டிருந்தது. நாளாந்தம் பணம் கட்டுதல் மற்றும் மாதாந்தம் சேகரிக்கப்படுகின்ற பணம் தொடர்பாக வேறொரு உத்தியோகத்தரின் மேற்பார்வைக்கு உள்ளாக்கப்பட வேண்டியிருந்தமை இனங்காணப்படாதிருந்ததுடன் பஸ் வண்டிகளுக்காக வாடகைக் கட்டணம் அறவிடுவதற்கு நியமிக்கப்பட்ட நபருக்கு சபையினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ஒவ்வொரு

தினத்தின் பின்னருமான அடுத்த தினம் பணத்தை சபைக்குக் கட்ட வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்தும் சபைக்கு பணம் கட்டுதல் 5 - 10 தினங்களுக்கிடையிலான தாமதத்தைக் கொண்டிருந்தது.

## 2.3 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

(அ) சபைக்குரிய ரூபா 100,000 பெறுமதியான சிறியரக குபோட்ட டெக்ரர் 05 வருடகாலமாகவும், ரூபா 1,250,000 பெறுமதியான கப் வாகனம் ஒரு வருட காலமாகவும் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) ரூபா 220,000 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட மீகலேவ பழைய வாராந்த சந்தைக் கட்டிடம் மற்றும் ரூபா 150,000 கிரயமான மீகலேவ வாராந்த சந்தைக் கட்டிடம் என்பன மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது எவ்வித செயற்பாட்டிற்கும் ஈடுபடுத்தப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் தற்போது வரையிலும் மீகலேவ வாராந்த சந்தை விளையாட்டுத்திடலாக பயன்படுத்தப்படுகின்றது.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பௌதீகப் பரிசோதனை/ மெய்மையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 72,257,818 ஆக இருந்தது.

## 2.5 சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

மீகலேவ நகரத்தின் மகாவலி நகர வீதிக்கு முன்பக்கமாக சபைக்குரிய 05 காணித் துண்டுகளில் அனுமதியற்ற நபர்கள் வசித்து வருவதுடன் இந்த அனுமதியற்ற கட்டிடங்களை அகற்றுவது தொடர்பாக 2009 ஆம் ஆண்டிலிருந்து 9233 ஆம் இலக்க வழக்கு தொடரப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் உதவியின் கீழ் ரூபா 42,895,582 தொகை செலவில் கல்கமுவ நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டு 2012 சனவரி 20 இல் திறந்து வைக்கப்பட்ட 36 கடைகளை உள்ளடக்கிய வியாபாரத் தொகுதிக்காக சபையினால் நிரந்தரமாக மின்சார வழங்கல் சேவை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்கமுவ பஸ்நிலைய அபிவிருத்தி செய்தல் I ஆம் கட்டத்திற்காக ரூபா 1,105,000 தொகை செலவிடப்பட்டு 34,000 கொங்கிரீட் சிறு கற்கள் பெறப்பட்டிருந்த போதிலும் இறுதி மூலப் பொருள் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் வேலைக்காக 22,200 கொங்கிரீட் சிறு கற்களே பயன்படுத்தப்பட்டிருந்தன. தேவைக்கு மேலதிகமாக 11,800 கொங்கிரீட் சிறு கற்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எஞ்சிய 11,800 கொங்கிரீட் சிறுகற்களில் 6486 சிறு கற்கள் பஸ்நிலைய அபிவிருத்தியன் II ஆம் கட்டத்திற்காக உரிய ஒப்பந்தக்காரச் சங்கத்திற்கு 2012 யூன் மாதத்தின் போது வழங்கப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 172,705 பெறுமதியான 5314 கொங்கிரீட் சிறுகற்கள் எஞ்சிக் காணப்பட வேண்டிய போதிலும் 2013 பெப்ரவரி 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது அவ்வாறான கொங்கிரீட் சிறு கற்களின் இருப்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) சபையினால் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 2,034,678 ஆக இருந்தது. அவ்வாறே சபைக்குரிய மாதாந்த தவணைக் கட்டணமாக ரூபா 7,657 படி அந்நிதியத்தினால் அறவிடப்பட்டிருந்த போதிலும் அந்த அறவிடல்கள் சபையின் எந்த ஊழியர்களுக்குரியது என சபை அறிவித்திருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்